# தேடல் மற்றும் மீட்புக் குழு (Search & Rescue Committee)

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: டாக்டர். சு.பிரபாகர், இ.ஆ.ப.,

ந.க.21496/2018/பே.மே. நாள்: 16 .10.2018

பொருள்: பேரிடர் மேலாண்மை - வழகிழக்குப்பருவ மழை 2018 - கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வழகிழக்குப்பருவ மழையின் பொருட்டு வருவாய் கோட்ட அளவில் தேடல் மற்றும் மீட்புக் குழு நியமனம் செய்து ஆணையிடுதல்.

பார்வை:
1. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வடகிழக்கு பருவமழை-2018 முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றறிக்கை Rc.No. N.C.I (4)/3838/2018, நாள்: 25.08.2018.
2. மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற வடகிழக்குப் பருமழை தயார் நிலைக் கூட்ட நடவடிக்கைகள் நாள்: 18.09.2018.
3. வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் காணொலிக் காட்சிக் பணி ஆய்வுக் கூட்டம் நாள்: 05.10.2018.

- - - - - - - - -

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எதிர்வரும் வழகிழக்குப்பருவ மழை காலத்தில் பெரு மழை வெள்ளம் ஏற்படும் சூழ்நிலைகளில் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு தேடல் மற்றும் மீட்புக் (Search & Rescue Committee) குழு நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

1. வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
2. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், கிருஷ்ணகிரி.
3. இணை இயக்குநர் (நலப் பணிகள்), கிருஷ்ணகிரி.
4. துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்), கிருஷ்ணகிரி.
5. இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்பு துறை).
6. மாவட்ட வன அலுவலர், கிருஷ்ணகிரி.
7. வன உயிரின காப்பாளர், வன உயிரின காப்பகம், ஓசூர்.
8. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிருஷ்ணகிரி.
9. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தர்மபுரி மண்டலம்.
10. நகராட்சி ஆணையாளர், கிருஷ்ணகிரி / ஓசூர்,
11. அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
12. ஏரியா கமாண்டன்ட், ஊர்காவல்படை, கிருஷ்ணகிரி
13. உதவி இயக்குநர், மீன்வளம்,
14. வட்டார போக்குவரத்து அலுவலர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
15. கோட்ட மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்.
16. உதவி செயற்பொறியாளர், பொது பணித்துறை (நீ.ஆ.ஆ),
17. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்,
18. அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
19. அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.

. . . 2 . . .

20. நகராட்சி ஆணையாளர், கிருஷ்ணகிரி / ஓசூர்.
21. அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர், கிருஷ்ணகிரி.
22. அனைத்து உள்வட்ட வருவாய் ஆய்வாளர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
23. அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.
24. அனைத்து ஊராட்சி செயலர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.

i. வருவாய் கோட்ட அளவில் வருவாய் கோட்ட அலுவலர் கோட்ட பேரிடர் மேலாண்மை அலுவலராகவும், தேடல் மற்றும் மீட்புக் குழுவின் தலைவராகவும் செயல்படவேண்டும். தமது கோட்டத்திற்குட்பட்ட வட்டார அளவிலான மண்டல குழுக்களின் பல்துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து தேடல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

ii. மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பேரிடர் காலங்களில் மீட்புப் பணிகளுக்குத் தேவையான மீட்பு சாதனங்கள் / கருவிகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

iii. மீட்பு பணிகளுக்கு பயன்படும் வகையில் போக்குவரத்து வாகனங்கள் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

iv. மழை / பெரு வெள்ளம் ஏற்படும் சமயங்களில் மீட்பு பணிக்காக நீச்சல் தெரிந்தவர்களின் விவரங்களை கிராம அளவில் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

v. பள்ளிக் கூடங்கள், கல்யாண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள், திரையரங்குகள், கோயில் மண்டபங்கள் போன்றவற்றின் விவரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

vi. மீட்பு பணிகளின் போது தேவைப்படும் மருத்துவம் மற்றும் முதலுதவிக்குத் தேவையான உபகரணங்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

vii. தொற்று நோய்கள் பரவுவதை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

viii. நிகழ்வுகள் குறித்து உண்மையான, தெளிவான அறிக்கையை உடனுக்குடன் மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிக்கவேண்டும்.

(ஒம்/-) சு.பிரபாகர்,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

/ உண்மை நகல் /

20/10/18

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
கிருஷ்ணகிரி.

20/10/2018

பெறுதல்
சம்மந்தப்பட்ட அலுவலர்கள். (மின்னஞ்சல் வாயிலாக)
(அலுவலகத் தலைவர்கள் தங்களின் சார்நிலை அலுவலர்கள் / பணியாளர்களுக்கு உத்தரவு நகலை சார்வு செய்யவேண்டும்)

நகல்: காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி,

நகல்:திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி.

நகல் : செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை (நீ.ஆ.து), தர்மபுரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் மேசைக்கு.

நகல் : மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர் மேசைக்கு.

நகல் : கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-600 005 - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.